

Shutterstock

ஒருவர் தற்போது செய்யும் செலவுகளோடு தோராயமான பணவீக்க விகிதத்தைச் சேர்த்து கணக்கிட்டுப் பார்த்தால், நமக்கு சுமாராக எவ்வளவு தேவைப்படலாம் என்பதை நிர்ணயிக்க முடியும். அந்தத் தொகையைப் பொறுத்து ஒருவர் தனது மாதாந்திர முதலீட்டை திட்டமிட்டுக் கொள்ளலாம். ஆனால், எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்த மாதாந்திர முதலீட்டை நிறுத்தக்கூடாது என்பதை ஒருவர் தன் மனதில் உறுதியாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி நிறுத்தினால், ஓய்வுக் கால சேமிப்பைக் குறைத்துவிடும். மேலும், முறையான தொடர் முதலீடுகள் செய்யும்போதுதான், கூட்டு வட்டி அதிசயத்தினால் பணவீக்கத்தைத் தாண்டி அதிக லாபத்தை அடைய முடியும்.

## முதலீட்டு பாதை எப்படி இருக்க வேண்டும்?

ஈக்விட்டி, ஈக்விட்டி மியூச்சுவல் ஃபண்டை பொறுத்தவரை, அது சந்தையின் ஏற்ற இறக்கத்துக்கு உட்பட்டவை என்பதால், மிக அதிக லாபத்தைத் தருவதாகவும், நஷ்டத்தைத் தருவதாகவும் இருக்கலாம். இந்த ஏற்ற இறக்கத்தை சமாளிக்க ஒருவர் தன்னுடைய இளம் வயதில் அதிகபட்ச தொகையை ஈக்விட்டிகளில் முதலீடு செய்ய வேண்டும். பிறகு வயதாக ஆக தன்னுடைய ஈக்விட்டி முதலீட்டுதொகையைக்குறைத்துக்கொள்ள வேண்டும். அதாவது, உங்களுடைய முதலீட்டுப் பாதை உங்களுடைய வயதைப் பொறுத்து சறுக்குப் பாதையாக இருக்க வேண்டும். இதன் மூலம் வயதாக ஆக ஈக்விட்டிகளில் அதிக ஏற்ற இறக்கங்களிலிருந்து உங்களுடைய ரிஸ்குகளைக் குறைத்துக்கொள்ள முடியும். ஆனால், அவற்றை குறைவான ஏற்ற இறக்கங்கள் உள்ள முதலீட்டு திட்டங்களுக்குப் படிப்படியாக மாற்றிக்கொள்ளலாம்.

மியூச்சுவல் ஃபண்டு வழங்கும் முறையான பரிமாற்ற திட்டங்கள் (Systematic transfer plan) மூலம் உங்களுடைய முதலீடுகளை ஈக்விட்டியிலிருந்து கடன் சார்ந்த முதலீடுகளுக்கு மாற்றிக்கொள்ளலாம். இதற்காக முழுவதுமாக ஒருவர் ஈக்விட்டிகளிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்று அவசியமில்லை. ஓய்வுக்காலத்தை நெருங்கும்போது செய்யும் ஈக்விட்டி முதலீடுகளின் அளவு ஒருவரது ரிஸ்க்கைத் தாங்கும் வலிமையைப் பொறுத்து பங்குச் சந்தையில் முதலீடு செய்துகொள்ளலாம்.

முதலீடு செய்வதைப் போலவே, செலவு செய்வதையும் முறையாக செய்ய வேண்டியது அவசியம். ஓய்வுக் காலத்தின்போது தினசரி செலவுகளுக்கு தேவையான பணத்தை முறையான பணம் பெறும் திட்டங்கள் (Systematic withdrawal plan) மூலம் குறிப்பிட்ட தொகையை மாதாமாதம் எடுத்துக் கொள்ளலாம். அதற்கேற்ப அந்த மாதாந்திர தொகை உங்களுடைய வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுவிடும். அந்தப் பணத்தை மட்டும் எடுத்து செலவு செய்வதன் மூலம் ஒருவர் தன்னுடைய செலவீனத்திலும் ஒழுக்கத்துடன் திட்டமிட்டு நடந்துகொள்ள முடியும்.

ஓய்வுக் காலத்தில் வளமாக வாழ்வதற்காக செய்யும் முதலீடுகள், பங்குச் சந்தையில் செய்யப்படாத முதலீடுகளாக இருக்கும்பட்சத்தில், பணவீக்கத்தின் காரணமாக உங்களுக்குத் தேவையான வருமானமும் லாபமும் கிடைக்காமல் போகலாம். எனவே, நீண்ட கால அடிப்படையிலான உங்களுடைய ஓய்வுக் கால முதலீடுகள், ஓய்வுக் கால தேவைகளுக்கான வருமானத்தைத் தரும் ஈக்விட்டிகளில் முதலீடு செய்வதுதான் புத்திசாலித்தனமான முடிவாக இருக்கும். இதற்கு மியூச்சுவல் ஃபண்டுகளின் முறையான முதலீட்டு திட்டங்கள் உங்களுக்கு உதவியாக இருக்கும்.

இதில் உங்களிடம் கூடுதலாக எஞ்சி இருக்கும், பணத்தை இப்போதே முதலீடு செய்யத் துவங்குங்கள். அதன் மூலம் உங்களுடைய ஓய்வுக் கால தேவைகளை எளிதாக சமாளித்து மகிழ்ச்சியாக வாழலாம்.

தொகுப்பு: **சி.சரவணன்**

www.vikatan.com